**செய்தி வெளியீடு எண்: 172** **நாள் :22.04.2015**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு **உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் இரா.காமராஜ் அவர்கள்** தலைமையில் இன்று **(22.04.2015)** இந்து சமய அறநிலையத்துறை செயல் திட்டங்கள் குறித்து சீராய்வுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

கோடை வெயில் அதிகமாக இருப்பதால், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, பெரிய திருக்கோயில் வளாகங்களில் பக்தர்கள் வரும் பிரகார நடைபாதைகளில் **குளிர்ப்பூச்சு** (Cool Paint) பூச அறிவுறுத்தப்பட்டது. மேலும் கோடைகாலத்தில் உச்சி காலவேளையில் பக்தர்களின் தாகம் தீர்க்க நீர்மோர், பானகம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அலுவலர்களை அறிவுறுத்தினார்.

மாண்புமிகு அம்மா அவர்கள் வழிகாட்டுதலின்படி, கடந்த 4 ஆண்டுகளில் ரூ.290.60 கோடி மதிப்பீட்டில் 7327 திருக்கோயில்களின் திருப்பணிகள் முழுவதுமாக மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது. இது ஒரு வரலாற்று சாதனையாகும். மேலும் 85 திருக்கோயில்களின் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு விரைவில் குடமுழுக்கு செய்யும் நிலையில் உள்ளது. தற்போது திருப்பணிகள் நடைபெற்று வரும் ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில், திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீவில்லிபுத்தூர் அருள்மிகு வடபத்ரசாயி திருக்கோயில், சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாத சாமி திருக்கோயில் ஆகியவற்றின் பணிகள் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு அமைச்சர் ஆய்வு செய்தார்.

தமிழக அரசால் நியமிக்கப்பட்ட தொல்லியல் வல்லுநர் குழு ஆய்வு செய்த, திருக்கோயில்களின் திருப்பணிகள் புனரமைப்பிற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.22.50 கோடி வீதம் கடந்த 4 ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.90 கோடியில் செய்யப்பட்ட புனரமைப்பு பணிகள் மற்றும் தேவைப்படும் திருக்கோயில்களின் நிதி ஆதாரம் குறித்தும் அதற்கான வரைவுத்திட்டம் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களாள் துவக்கிவைக்கப்பட்ட அன்னதான திட்டத்தை மாநில அளவில் முறைப்படுத்துவது, தமிழகத்தின் அனைத்து திருக்கோயில்களிலும் திருவிழா காலங்களில் பக்தர்களுக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மற்றும் திருக்கோயில் வளாகத்தில் இயற்கை சார்ந்த சூழ்நிலைகளை ஏற்படுத்துவது, மலைப்பகுதிகளில் அமைந்துள்ள திருக்கோயில்களில் கம்பிவட ஊர்தி அமைப்பது, பழநி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் 2-வது உயர்தர கம்பிவட ஊர்தி அமைப்பது ஆகியன குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழக திருக்கோயில்கள், அதனுடன் இணைந்த கட்டிடங்கள் மற்றும் திருக்குளங்களில் மழைநீர் சேகரிப்பு திட்டம் செயல்பாட்டில் உள்ளன. மேலும் நீர் ஆதாரங்களை மேம்படுத்தும் திட்டங்கள் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறை அலுவலர்களுடன் விவாதித்தார்.

திருக்கோயில் பாதுகாப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள், நவீனப்படுத்தப்பட்ட களவு எச்சரிக்கை மணி, கண்காணிப்பு காட்சிப்படக் கருவி (CCTV) ஆகியவற்றின் பயன்பாட்டிலுள்ள நடைமுறைகள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இந்து சமய அறநிறுவனங்களுக்கு சொந்தமான 1886.79 ஏக்கர் பரப்பளவுள்ள நிலங்கள் 304.0595 கிரவுண்டு பரப்புள்ள மனைகள் 124.1026 கிரவுண்டு பரப்புள்ள கட்டிடங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டு திருக்கோயில்கள் வசம் சுவாதீனம் பெறப்பட்டது மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் தமிழக அரசின் மிகப் பெரும் சாதனையாகும். இதன் சந்தை மதிப்பு ரூ.2337.55 கோடி என்பது குறிப்பிடத்தக்கது. இதனை முறையாக பராமரிக்கும் நடவடிக்கைகள் குறித்தும், தமிழக திருக்கோயில்களில் 528 திருக்கோயில்களுக்கு சொந்தமான 3098.30 ஏக்கர் நிலங்கள் தனியார் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டதை கண்டறிந்து திருக்கோயில் பெயரில் மீண்டும் பட்டா மாற்றம் செய்ய பெறப்பட்ட ஆணையின்படி சுவாதீனம் பெறப்பட்டதை ஆவணப்படுத்தும் நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை, கூடுதல் தலைமைச் செயலர் முனைவர் இரா.கண்ணன், இ.ஆ.ப., அவர்கள் இயற்கை வளங்கள், நீர்ஆதாரங்கள், திருக்கோயில் தூய்மைப் பணி குறித்த நடவடிக்கைகளை எடுத்துரைத்தார். இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் முனைவர் மா.வீரசண்முக மணி, இ.ஆ.ப., அவர்கள் இத்துறையின் எதிர் காலத் திட்டங்கள் மற்றும் செயல்படுத்தியுள்ள திட்டங்களின் நடவடிக்கைகளை சீராக்குதல் குறித்து விளக்கினார். உடன் கூடுதல் ஆணையர்கள் திருமதி. ந.திருமகள், திருமதி.மா.கவிதா உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**